(2021-22-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்) (பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE 21 UTM 306

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி), பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : டிசம்பர் - 2022**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 70**

**மூன்றாம் பருவம்** **நேரம் : 3 மணி**

**பகுதி – III**

**பக்தி இலக்கியம்**

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. திருநாவுக்கரசரின் இயற்பெயர்…………………..

   அ) மருள்நீக்கியார் ஆ) ஆளுடையப்பிள்ளை இ) திருவாதவூரர் ஈ) ஆரூரர்

2. -------------------இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மணமும் கரையும்.

   அ) திருக்கோவை ஆ) திருவாசகம் இ) திருமந்திரம் ஈ) தேவாரம்

3. நாட்டுப்புறப் பாடல்களுக்கு இடமளித்துப் பாடியவர்…………………..

   அ) ஆண்டாள் ஆ) பெரியாழ்வார் இ) திருமங்கையாழ்வார் ஈ) பூதத்தாழ்வார்

4. கிறித்தவக் கம்பர் என்று அழைக்கப்படுபவர்……………

   அ) தெய்வநாயகம் ஆ) ஹெச்.ஏ.கிருட்டிணப்பிள்ளை இ) எல்லீஸ் ஈ) கால்டுவெல்

5. பட்டினத்தார் பிறந்த ஊர்………………………

   அ) காவிரிப்பூம்பட்டினம் ஆ) இடைக்காடு இ) மயிலாடுதுறை ஈ) திருவொற்றியூர்

**ஓரிரு சொற்களில் விடையளிக்கவும்.** (K2)

6. மாணிக்கவாசகரின் பெற்றோர் பெயர் என்ன?
7. நாயன்மார்கள் வரிசையில் இடம்பெற்ற பெண்கள் யாவர்?
8. பெரியாழ்வார் பிறந்த ஊர் எது?
9. கண்ணி - என்பதன் பொருள் யாது?
10. பத்திரகிரியார் எந்த நாட்டின் அரசர்?

(த.பி.பா.)

***ETHICAL PAPER***

**பகுதி – ஆ (5 X 4 = 20 மதிப்பெண்கள்)**

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்கு விடையளிக்க.** (K3)

11. அ) பெரியபுராணம் நூற்குறிப்பு வரைக.

(அல்லது)

ஆ) "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி" இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

12. அ) மணிமாலையில் சுந்தரர் இறைவனிடம் யாது வேண்டுகிறார்?

(அல்லது)

ஆ) சேந்தனார் கூறும் பல்லாண்டின் தன்மை யாது?

13. அ) திருப்பள்ளி எழுச்சியில் கூறப்படும் திருமாலின் சிறப்புக்களைச் சுருக்கமாகக் கூறுக.

(அல்லது)

ஆ) "விம்ம வளர்ந்தவளே வேழமும் ஏழ் விடையும் செங்கீரை ஆடுக" இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக

14. அ) குணங்குடி மஸ்தான் சாகிபு பற்றிக் குறிப்புத் தருக.

(அல்லது)

ஆ) எக்காலக்கண்ணியில் காணப்படும் சித்தர்களின் யோகநிலையைக் குறிப்பிடுக.

15. ஆ) தாயாருக்கு இறுதிக்கடன் எவ்வாறு செய்யப்பட வேண்டும்?

(அல்லது)

ஆ) குரு வணக்கத்தின் சிறப்பு யாது?

**பகுதி - இ ( 4 X 10 = 40 மதிப்பெண்கள்)**

**பின்வரும் வினாக்களில் எவையேனும் நான்கனுக்கு மட்டும் விரிவாக விடையளிக்க. வினா எண். 16க்குக் கண்டிப்பாக விடையளிக்கவும். (K4 & K5)**

16. இறைவனின் பெருமைகளாகத் திருநாவுக்கரசர் மொழிவதை நும் பாடப்பகுதிக் கொண்டு விளக்குக.
17. அற்புதத்திருவந்தாதி குறிப்பிடும் சிவனின் தன்மைகள் குறித்து எழுதுக.
18. ஆண்டாள் கூறும் வதுவை மணத்தை வரிசைப்படுத்திக் காட்டுக.
19. இரட்சணிய யாத்திரிகம் புலப்படுத்தும் சிலுவைப் பாட்டினைச் சுருக்கி வரைக.
20. மெய்ஞான புலம்பல் பற்றி பத்திரகிரியார் கூறுவதைத் தொகுத்துரைக்க.
21. திருமுதுகுன்றம் பதிகத்தில் இடம்பெறும் செய்திகளை எடுத்துரைக்க.

********

ETHICAL PAPER